# வலிகாமம் வடக்கில் படையினரிடம் சிக்கிய 23 பேர் செஞ்சிலுவைச் சங்கத்தால் மீட்பு


பக்கங்கள் நான்கு விலை ரூபா: 4 - 50

# முரசொலி

முரசு 05 ஒலி 219 பிரசோற்பத்தி ஆனி 21 (05 - 07 - 1991) வெள்ளி


கடந்த 8 மாதகாலமாக வலிகாமம் வடக்கு பகுதியில் இராணுவ நடவடிக்கையின் போது சிக்குண்ட 100க்கு அதிகமானோரில் 23 பேர் மட்டும் நேற்று யாழ் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினால் மீட்டெடுக்கப்பட்டனர். இவர்களில் 2 இளைஞர், 2 குழந்தைகள், 2 இளம் பெண்கள் உட்பட 17 வயோதிபர்களும் அடங்குவர். கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் இராணுவ நடவடிக்கை இடம்பெற்ற போது வெளியேற முடியாமல் வீடுகளில் சிக்குண்டவர்களையே செஞ்சிலுவை நேற்று மீட்டெடுத்தது. மீட்கப்பட்டவரின் விவரம் வருமாது: கதிரமலை கதிரவேல் (18 வயது) மாவிட்டபுரம், வே. பராசக்தி (43 வயது) இவரது இரு குழந்தைகளான சரணேசன் (6 வயது), நாதேந்திரா (2½ வயது), கா வள்ளியம்மை (68 வயது) தையிட்டி, சே. காசிப்பிள்ளை (95 வயது) தையிட்டி இவர் இரண்டு கண்களும் பார்வை இழந்தவர், கா. பாக்கியம் (70 வயது)

— 04ஆம் பக்கம் பார்க்க

# ஈழத்தமிழர் இந்திய உதவியை எதிர்பார்க்கும் நிலையில் இல்லை

## லண்டன் அனைத்துலக தமிழர் மாநாட்டில் அருச்சுனா சிற்றம்பலம் அறிவிப்பு

**"ஈழத்தைப் பொறுத்தவரையில் இந்தியா பிராந்தியத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. எனவே ஈழப்பிரச்சினையிலும் இந்தியாவின் ஒத்துழைப்பு அமையலாம். ஆனால் இந்த ஒத்துழைப்பு ஈழத் தமிழர்களுக்கு அவசியமானதோ அல்லது தவிர்க்க முடியாததோ அல்ல. இதை இந்தியாவும் கருத்திற்கொள்ள வேண்டும்."**

இவ்வாறு அண்மையில் லண்டனில் நடைபெற்ற விடுதலைப் புலிகள் ஆதரவான அனைத்துலகத் தமிழர் சங்க மாநாட்டில் உரையாற்றிய இலங்கையில் பிறந்தவரும் பிரிட்டிஷ் பிரஜாவுரிமை பெற்றவருமான அருச்சுனா சிற்றம்பலம் தெரிவித்தார்.

"ஈழத்தமிழர் தமது கடும் ஆயுதப் போராட்டம் மூலம் இன்று விடுதலையை நோக்கிச் செல்லும் தனித் தேசிய இனமாக மாறியுள்ளனர். தமது பிரச்சினைகளைத் தாமே தீர்த்துக்கொள்ளும் அளவுக்கு வந்துவிட்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## 3 உயர்தர மாணவர்கள் படையினரால் கொலை

மட்டக்களப்பு பெரியபோரதீவு முகாம் இராணுவத்தினரும் ரெலோ குழுவினரும் பழுகாமம் கிராமத்தைச் சுற்றி வளைத்து 200 இளைஞரைக் கைதுசெய்தனர்.

திங்களன்று நடைபெற்ற இச் சம்பவத்தின்போது

— 4 ஆம் பக்கம் பார்க்க

### ஜானகி இராமச்சந்திரன் கூறுகிறார்

## ஜெயலலிதாவின் ஆட்சி எம். ஜி. ஆர். ஆட்சியே!

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு அடுத்த மாதம் வரை கறுப்புப்பூனை அதிரடிப்படையினரே பாதுகாப்பு அளிப்பர் இதன் பின்னர் தமிழக பொலிஸார் பாதுகாப்புப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வர்.

இதேவேளை ஜெயலலிதா தமிழக முதலமைச்சரானது குறித்து திருமதி ஜானகி

— 4 ஆம் பக்கம் பார்க்க

## புலிகளை வெளியேற்றுவர்

"தமிழ் நாட்டில் உள்ள இலங்கையர்களில் விடுதலைப் புலிகள் அடையாளம் காணப்பட்டு நாடு கடத்தப்படுவர்" என இந்திய உள்துறை இணையமைச்சர் எம். எம். ஜேக்கப் நேற்று கொச்சியில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## பேராசிரியர் சோல்க் நவம்பரில் வருகிறார்.

சுவீடன் உப்சலா பல்கலைக் கழகப் பேராசிரியர் "பீற்றர் சோல்க்" நவம்பரில் யாழ் வருவார் எனப் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன.

பல துறைகளில் ஆராய்ச்சி மேற்கொண்ட பேராசியர் யாழ் பல்கலைக்கழகத்திற்கு இம்முறை பாரிய அளவில் தமது கருத்துரைகளை வழங்

→4ஆம்பக்கம் பார்க்க

## வரதன் தற்கொலை பொலிஸார் அறிவிப்பு

கொழும்பு கூட்டுப்படைத் தலைமையகம் மீதான வெடிகுண்டுத் தாக்குதலுக்குக் காரணமானவர் எனக் கருதப்படும் பருத்தித்துறையைச் சேர்ந்த நடராஜா வரதன் சயனைட் அருந்தித் தற்கொலை செய்துவிட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினமிரவு இவரை தலவாக்கெல்லைப் பகுதியில் கைதுசெய்ய பொலிஸார் முயன்றபோது இவர் தற்கொலை செய்து கொண்டதாகவும், இவரது சடலம் கொழும்புக்குக்கொண்டு வரப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

### பாதுகாப்பு அமைச்சுக் கோரிக்கை

## 14 நாள்களினுள் கொழும்பிலுள்ளோர் பதியவும்!

கொழும்பில் தங்கியுள்ள வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் அனைவரும் 14 நாள்களுக்குள் அரகிலுள்ள பொலிஸ் நிலையங்களில்தம்மைப் பதிவு செய்யுமாறு பாதுகாப்பு அமைச்சுக் கேட்டுள்ளது.

அகதி முகாம்களில் உள்ளவர்கள் பதிவு செய்யவேண்டிய தில்லை எனவும், வீட்டு உரிமையாளர்கள் தாம் தங்க

— 4 ஆம் பக்கம் பார்க்க

## தமிழகக் கடற்பாதுகாப்பு ஆளுநர்-பவார் சந்திப்பு

தமிழ்நாட்டின் கடலோரப் பகுதிகளில் இந்தியக் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகளை அதிகரிப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை தமிழகம் வந்த இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் மாநிலத்தின் ஆளுநர் பீஷ்மன் நாராயண சிங்குடன் இது குறித்து பேச்சுக்கள் நடாத்

— 4 ஆம் பக்கம் பார்க்க

## கேரள வானொலியில் வெடிகுண்டுப் புரளி!

கேரள மாநிலத்தில் கடந்த வாரம் வெடிகுண்டுப் புரளி ஒன்று அரச வானொலியிலேயே ஒலிபரப்பானது.

கடந்த வாரம் திருவனந்தபுரம் வானொலியில் சினிமாப் பாடல்கள் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தபோது மாலை 6.50 மணியளவில் திடீரென வானொலியில் மர்மக்குரல் ஒன்று ஒலித்தது.

"எர்னாங்குளம் இருமாடி ஹோட்டல் அருகில் வெடிகுண்டு உள்ளது இது 48 மணி நேரத்தில் வெடிக்கும். 20 கிலோ மீற்றர் வரை உயிர்ச்சேதம் விளைவிக்கும்"

← 4 ஆம் பக்கம் பார்க்க

### ★ விடுவிக்கப்பட்டவர்கள் தகவல்

## வீடுகளை விட்டு வெளியே நடமாட படையினர் அனுமதிக்கவில்லை!

நேற்று வலிவடக்குப் பகுதியில் இராணுவத்திடம் சிக்கி செஞ்சிலுவையால் மீட்கப்பட்டவர்கள் முரசொலிக்குத் தெரிவித்ததாவது

கடந்த ஆண்டு இராணுவ நடவடிக்கையின் போது சிக்கிய எங்களை அப்பகுதியில் நடமாட இராணுவம் அனுமதிப்பதில்லை அத்துடன் நாங்கள் தங்கியிருந்த வீடுகளில் இராணுவ காவலர்கள் 24 மணி நேரமும் கண்காணித்தனர் காலைக்கடன்களை வீடுகளுக்கு உள்ளேயே கழிக்க வேண்டியிருந்தது. எக்காரணம் கொண்டும் வெளியேவர அனுமதிப்பதில்லை. வீட்டிலிருந்து

— 4 ஆம் பக்கம் பார்க்க

### பண்ருட்டி கூறுகிறார்

## தாக்குதலுக்கு ஜெயலலிதாவே பொறுப்பேற்க வேண்டும்

நேற்றுத் தமிழக சட்டசபையில் முதலமைச்சர் ஜெயலலிதா, ஆளுநர் பீஷ்மர் நாராயண் சிங் முன்னிலையிலேயே தாம் தாக்கப்பட்டது வெட்கப்படவேண்டிய செயலாகும் எனப் பண்ருட்டி ராமச்சந்திரன் நேற்றுச் செய்தியாளர்களிடையே பேசுகை

— 4 ஆம் பக்கம் பார்க்க

## வெளியேறுவது நல்லது!

தமிழ் நாட்டில் தங்கியுள்ள இலங்கை அகதிகள் இலங்கைக்கு திரும்புவது அவர்களுக்கே நல்லது என்று மத்திய இணை அமைச்சர் வாழப்பாடி ராமமூர்த்தி கூறியுள்ளார்.

## ★ குண்டுவெடிப்பின்எதிரொலி; ஸ்ரீமாவோ கோரிக்கை

# பாதுகாப்புத்துறை அமைச்சர் பதவி விலக வேண்டும்!

கொழும்பு கூட்டுப்படைத் தலைமையகக் குண்டு வெடிப்பின் எதிரொலியாகப் பாதுகாப்புத் துறைக்குப் பொறுப்பான அமைச்சர் பதவி விலக வேண்டுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கோரியுள்ளார்.

இந்தக் குண்டுவெடிப்பிற்கான முழுப் பொறுப்பையும் அரசு ஏற்க வேண்டும் பாதுகாப்புத் துறையினரைச் சரியான முறையில் வழிப்படுத்த அரசு தவறிவிட்டது.

அமெரிக்காவில் இராணுவத் தலைமையகத்தில் இப்படியொரு குண்டு வெடிப்பு நிகழ்ந்திருப்பின் அங்கு எதிர்க் கட்சிகள் எத்தகைய கோரிக்கையை விடுக்குமோ அவ்வகையிலான ஜனநாயக ரீதியிலானதே இக்கோரிக்கை.

இக்குண்டு வெடிப்பதைத் தடுக்கத்தவறிய அரசு அதற்கான தார்மீகப் பொறுப்பையும் ஏற்றே ஆக வேண்டுமெனவும் திருமதி ஸ்ரீ மாவோ பண்டார நாயக்கா தெரிவித்துள்ளார். (74)

## கப்பல் கப்டனின் உடல்

## ஹெலியில் எடுத்துச் செல்லப்பட்டது

'லங்கா சிறி' கப்பலின் இரண்டாவது கப்டனின் உடல் பருத்தித்துறையில் இருந்து திருமலைக்குக் கப்பல் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து ஹெலிக்கொப்டர் மூலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டு உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

கடந்த வாரம் பருத்தித்துறையில் மேற்படி கப்பல் பொருள்கள் இறக்கிக் கொண்டிருந்தபோது இவர் மாரடைப்பினால் மரணமானதாகத் தெரிவிக்கப்படுகிறது (ப-11)

## இன்று ஆலோசனைக் கூட்டம்;

### விரைவில் 'கெல்ற்' வகுப்பு ஆரம்பம்

யாழ் பல்கலைக்கழகத்திற்கு இவ்வருடம் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களுக்கான ஆங்கில வகுப்புகள் விரைவில் ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தெரிவு செய்யப்பட்டமாணவர்கள் யாழ் இந்துக் கல்லூரியில் இன்று 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு சமுகம் அளிக்க வேண்டுமென யாழ் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் க. பொ. த (உயர்தர) பரீட்சை சுட்டிலக்கம் குறியீட்டு இலக்கம் என்பவைற்றையும் கொண்டு வரவேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது. 13

## வலிமேற்கு விவசாயிகள்

### குரக்கன் செய்கையில் ஆர்வம்

வலிமேற்குப் பகுதியில் விவசாயிகளில் பலர் இம் முறை குரக்கன் செய்கையில் ஆர்வமுடன் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது நாற்று மேடை போட்டு குரக்கன் நடுவதற்கு தயாராக உள்ளன

இதேவேளை, மாதகல், பண்டத்தரிப்பு, சில்லாலைப் பகுதிகளில் சின்னவெங்காயச் செய்கையும் ஓரளவு மேற்கொள்ளப் பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

முன்னைய வருடங்களிலும் பார்க்க குறைந்த அளவிலேயே சின்ன வெங்காயச் செய்கை மேற்கொள்ளப் படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. 13

## அமிர் கொலை தொடர்பாக

## சுன்னாகம் வாலிபர் மீது வழக்கு

தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலதிபர் அ. அமிர்தலிங்கத்தைக் கொலை செய்தது தொடர்பாக சுன்னாகத்தைச் சேர்ந்த வாலிபர் ஒருவர் மீது தற்பொழுது கொழும்பில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அமிர்தலிங்கத்துடன் மற்றைய தமிழர் விடுதலைக்கூட்டணி உறுப்பினர் யோகேஸ்வரனும் இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டிருந்தார். எம். சிவசிதம்பரம் படுகாயமடைந்திருந்தார்.

1988 ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற இச்சம்பவம் தொடர்பாக இரண்டுவருடங்களுக்குப் பின்னர் தற்பொழுது இந்தப் புதிய தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

## சுவீடன் பல்கலைக்கழகத்தில்

## பெரியபுராண விளக்கவுரை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை சுவீடன் உட்சலா பல்கலைக் கழகத்தில் தமது தொடர் விரிவுரைகளை முடித்துக்கொண்டுள்ளார்.

சுவீடனில் எட்டுமாதம் தங்கியிருந்த பேராசிரியர் வேலுப்பிள்ளை பெரியபுராணம், நீலகேசி பற்றிய விளக்கவுரைகளும் தொல்காப்பியம் (சொல்லதிகாரம்) வீரசோழியம் ஒப்பியல் ஆராய்ச்சியும் செய்தார்.

7 ஆம், 8 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட சைவசமய எழுச்சியில் சம்பந்தர் வகித்த பங்கு பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரை இவ்வாண்டிறுதியில் 'ரெமனோஸ்' என்ற சஞ்சிகையில் வெளிவரவிருக்கிறது.

இதுதவிர '13 ஆம் நூற்றாண்டுவரை யாழ்ப்பாணச் சமயநிலை' என்ற கட்டுரை 'லங்கா' சஞ்சிகையின் ஐந்தாம்இதழில்வெளிவரவுள்ளது சுவீடன் பேராசிரியர் பீற்றர் ஷல்க் முரசொலிக்குக் கடித மூலம் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.


## மஹா சிவாசார்யாபிஷேகம்

(குருப்பட்டம் வழங்கல்)

அன்புடையீர்!

ஸ்ரீ கந்தசுவாமி திருவருளை முன்னிட்டு ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் பிரஜாபதி வருஷம் ஆனி மாதம் 28 ஆம் நாள் (12. 07. 91) வெள்ளிக்கிழமை பிரதமை திதியும் புனர்பூச நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் பகல் 12. 30 மணிமுதல் 1. 30 மணி வரையுள்ள கன்னி லக்கின சுபவேளையில்,

மிருசுவில் மன்னன் குறிச்சி நெல்லிக்கிணற்றடி கந்தசாமி ஆலய அர்ச்சகர்

**பிரம்மஸ்ரீ பாஸ்கர ஐயா**

அவர்கட்கு

(அமரர் சீனிவாசகக்குருக்கள் அவர்களின் சிரேஷ்ட புத்திரர் - திக்கம் துளாய்பிள்ளையார் ஆதீன தர்மகர்த்தா பரம்பரை)

ஸ்ரீமகாஸ்ரீ - கந்தசுவாமி சன்னிதியில் சிவாசார்யாபிஷேகம் நிகழ (குருப்பட்டம் வழங்கல்) திருவருள் கூடியிருப்பதால் அத்தருணம் உறவினர்களும், அன்பர்களும், நண்பர்களும் வந்து மகிழ்வித்து மெய்யன்பினோடு குருபாத பூஜையும் ஆசியும் பெறும் வண்ணம் திரிகரணசுத்தியுடன் அழைக்கின்றோம்

இங்ஙனம்
அன்பர்களும்,
நண்பர்களும்.

மன்னன் குறிச்சி நெல்லிக்கிணற்றடி,
கந்தசுவாமி கோவில் தேவஸ்தானம்,
மிருசுவில்.

07009


## ஒய்வூதியர் நலன்கருதி....

சுய விருப்பத்தின் பேரில் இளைப்பாறிய சகல ஒய்வூதியர்களின் விவரங்களும் உரிய நடவடிக்கைகளுக்காகச் சேகரிக்கப்படவிருப்பதால் சகல ஒய்வூதியரும் ஞாயிற்றுக்கிழமை காலை மல்லாகம் இந்து மகாவித்தியாலயத்தில் சமுகமளிக்குமாறு வலி - வடக்கு ஒய்வூதியர் சங்கம் கோரியுள்ளது.

## பெண்களின் இரத்தத்தில் சுவைகாணும் நுளம்புகள்

நுளம்புத் தொல்லை இங்கு மாத்திரமல்ல உலகெங்கும் வியாபித்திருக்கிறது. அதனை முற்றாகஒழித்துக்கட்ட வழி வகைகளைக் கண்டறிய ஆராய்ச்சி மேற்கொண்ட ஆராய்ச்சியாளர் நுளம்பைப் பற்றிய சிலஉண்மைகளைக் கண்டறிந்துவெளியிட்டுள்ளார்கள்.

நுளம்புகள் ஆண்களைவிடப் பெண்களையே கூடுதலாகத்தாக்க விரும்புகின்றன. அதற்குக்காரணம் பெண்களின் உடலில் இருக்கும் ஈஸ்ட் ரோஜன் என்று சொல்லப்படும் ஒருவகை செக்ஸ் ஹார்மோன்களுக்கு நுளம்புகளை ஈர்க்கும் சக்தி அதிகமாக இருக்கின்றனவாம். இதனால் அவர்களுக்குவியார்க்கும்பொழுது இந்த ஹார்மோன்களால் கவரப்பட்ட நுளம்புகள் அவர்களை அதிகம் தாக்குகின்றன.

மேலும் பெண் நுளம்புகளே மனிதரின் இரத்தத்தைக் குடிக்கின்றன. ஆண் நுளம்புகளின் உடல் வாகு காரணமாக அவைகளினால் இரத்தத்தைக்குடிக்கமுடிவதில்லை.

இன்னும் பெண் நுளம்பு ஒருதடவையில் தன் எடையைப்போல்ஒன்றரைமடங்குஎடை உள்ளஇரத்தத்தைக் குடிப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். (16)

## நவீனரக மருந்துகளை

### நிதானமாகக் கையாள அறிவுறுத்தல்

நோய்களுக்கான நவீன மருந்துவகைகளை நிதானமாகக் கையாள வேண்டுமென இலங்கை மருத்துவவியலாளர் சங்கம் கேட்டுள்ளது.

நவீனரக மருந்துகளைப் பிழையாகக் கையாள நேரும்போது அவை ஏற்படுத்தும் ஊறுகள்ஆபத்து மிக்கவை.

எதுவித பயிற்சியோ, ஆராய்ச்சியோஇன்றித் தகுதியற்றவர்கள் நவீனரக மருந்து வகைகளைக் கையாண்டு வருகின்றனர். இதனாற் பல எதிர்விளைவுகள் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறு மருத்துவவியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

## தமிழக சட்ட சபையில் ஆரம்ப நாளே அடிதடி!

தமிழக புதிய சட்டசபையில் நேற்று ஆளுநர் உரை இடம் பெற்ற முதல் நாளின்போது குழப்பம் ஏற்பட்டது. பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் பண்ருட்டி ராமச்சந்திரன் ஆங்கிலத்தில் அறிக்கை ஒன்றினை வாசிக்கையில் சுயேச்சை உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவரைத் தாக்கினாராம். இதனால் தாம் சபையை விட்டு வெளியேறுவதாகக் கூறி எதிரணி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

ஆளுநர் உரைக்கு முன்பாக இச்சம்பவம் நிகழ்ந்தது. முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இதுபற்றிக் கண்டனம் தெரிவித்துக் குறிப்பிடுகையில் இரு பகுதியினரிடமும் தவறு இருப்பதாகவும் இன்று சபாநாயகர் தீர்ப்பளிப்பார் என்றும் கூறினார்.

# செய்தி உலகம்

## இஸ்ரேலிய பிரஜை விடுதலை

காஷ்மீரில் வைத்துக் கடத்தப்பட்ட இஸ்ரேலிய பிரஜை நேற்று விடுவிக்கப்பட்டுள்ளார். ஸ்ரீநகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்தில் பத்திரிகையாளர்கள் முன்னிலையில் 25 வயதுடைய இந்த இஸ்ரேலியரை காஷ்மீர் தீவிரவாதிகள் விடுதலை செய்தனர்.

கடந்த வாரம் காஷ்மீரில் படகு வீடொன்றில் வைத்து 8 இஸ்ரேலியர்களைக் கடத்தத் தீவிரவாதிகள் முயன்றபோது ஒரு இஸ்ரேலியரும், இரண்டு தீவிரவாதிகளும் கொல்லப்பட்டமை தெரிந்ததே

## நாடு திரும்ப இமெல்டா முயற்சி

தனது கணவரின் உடலுடன் மீண்டும் எதிர்வரும் அக்டோபரில் தான் பிலிப்பைன்ஸ் திரும்பப் போவதாகத் திருமதி இமெல்டா மார்க்கோஸ் அறிவித்துள்ளார்.

ஆனால் திருமதி மார்க்கோஸ் நாடுதிரும்பினால் அவர் கைது செய்யப்படுவார் எனத் தற்போதைய பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி அக்கினோ தெரிவித்துள்ளார்.

திருமதி இமெல்டாமார்க்கோஸ் பிலிப்பைன்ஸை விட்டுத் தப்பிச்சென்று தற்பொழுது அமெரிக்காவில் வசித்துவருகிறார். இவரின் கணவரின் சடலத்தை பிலிப்பைன்ஸில் அடக்கம் செய்ய அவர் முயன்ற போதிலும் அக்கினோ அதற்கு அனுமதி வழங்க மறுத்துவிட்டமையும், இதனால் மார்க்கோஸின் சடலம் தற்பொழுது அமெரிக்காவில் பேணப்பட்டு வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## இதுவரை 352 பேர் பலி

பிலிப்பைன்ஸில் கடும் மழையினால் எரிமலைச் சிதைவுகள் அடித்துச் செல்லப்பட்டதில் 32 பேர் கொல்லப்பட்டார்கள். இவர்களையும் சேர்த்து பிலிப்பைன்ஸ் எரிமலையினால் கொல்லப்பட்டோரின் தொகை 352 ஆக அதிகரித்துள்ளது. இது இவ்வாறிருக்க எரிமலைப் பகுதியில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுவதாகவும் இது நல்லதற்கல்ல எனவும் எரிமலையை அவதானித்து வரும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

முரசொலி

எமது சிந்தனை

05 - 07 - 1991

# விபத்தைத் தடுக்கவே வீதி விதிமுறைகள்!

ஒரு காலத்தில் யாழ் நகர வீதிகளை யமஹாவும், ஹொண்டாவும் ஆக்கிரமித்தன.

யமஹா யமனாக உருவெடுத்தது. ஹொண்டா உயிரைக் ''கொண்டா, கொண்டா'' என வீதிகளிலே கதறி ஓடியது. பல உயிர்களைப் பலியும் எடுத்தது.

இ. போ. ச.வும் மினி பஸ் களும் பந்தயத்துக்குப் போட்டி போட்டு ஓடின. பல சந்தர்ப்பங்களில் இந்த வாகனங்களின் போட்டா போட்டி மக்களுக்குக் கிலியையும், திகிலையும் ஏற்படுத்தியது. இவை வரும் சத்தம் கேட்டவுடனே மக்கள் தற்பாதுகாப்புடன் இருந்தார்கள். பொம்மர் சத்தம் கேட்டு மக்கள் பதுங்கு குழிக்குள் ஓடுவது போல், இவை தூரத்தில் வருவதைக் கண்டதும் மக்கள் வீதியோரம் பதுங்கினார்கள் இது தற்பாதுகாப்பு நடவடிக்கை.

இவற்றின் இடத்தை இப்போது துவிச்சக்கரவண்டிகள் பிடித்துள்ளன. அங்கிங்கெனாதபடி எங்கும், எல்லாம் துவிச்சக்கர வண்டிகள் மயமாய் இருக்கின்றன.

துவிச்சக்கர வண்டிகளிலும் மூன்று ரகங்கள் உள்ளன. இதில் முக்கிய இடத்தை வகிப்பவை பெண்கள் ஓட்டும் வண்டிகள் இவையே வீதிகளைக் கூடுதலாக அலங்கரித்து ஆக்கிரமிக்கின்றன.

இந்த வண்டிகள் அநேக சந்தர்ப்பங்களில் பக்கம், பக்கமாக வரிசையோடு போவதைக் காணலாம். முழு வீதியும் அந்த வண்டிகள் வசம்.

எதிர்ப் பக்கத்திலிருந்து வரும் மற்ற வண்டிகள் இவற்றைக் கடப்பது சிரமம். பின்னுக்கு வருகிற வண்டிகள் முன்னேறவும் முடியாது.

துவிச்சக்கர வண்டிகளில் இன்னொரு ரகம் உண்டு. இது இளைஞர்களால் அதிவேகமாக ஓட்டப்படும் வண்டி. ஈராக்கின் ஸ்கட் ஏவுகணையை விட வேகமானது. அநேகமானவற்றுக்குப் பிறேக், பெல், லைற் ஒன்றுமே இருக்காது.

இப்படியான துவிச்சக்கர வண்டிகள் பல இடங்களில் விபத்துக்களை ஏற்படுத்தியுள்ளன. இந்த அதிவேக வண்டிகளில் மோதிக் காயமடைபவர்கள் நடுத்தர வயதினரே. வேகமாகவரும் இவர்கள் திடீரென நிற்பாட்ட முடியாது நேரே வந்து மோதுகிறார்கள். பிறேக்கும், பெல்லும், லைற்றும் இந்தக் கால கட்டத்தில் மிகவும் அவசியம்.

இரவு நேரங்களில் இவை திடீர்த் தாக்குதல்களை சில சந்தர்ப்பங்களில் நடத்துகின்றன. இரவில் மோதப்படும் பாதசாரிகள் விழுந்து எழும்புமுன் வண்டி மின்னல் வேகத்தில் மறைந்து விடும். இரவு நேரங்களில் துவிச்சக்கர வண்டிகளுக்கு வெளிச்சம் (லைற்) மிகவும் முக்கியம். ஓட்டுபவர் தங்களையும் பாதுகாத்து, மற்றவர்களையும், பாதுகாக்க வழி வகுக்கும்.

தமிழீழக் காவல்துறையின் போக்குவரத்துப் பிரிவு சென்ற வாரம் அறிவித்த போக்குவரத்து விதிமுறைகள் மிகவும் நன்மை பயக்கக்கூடியவை.

இந்த விதிமுறைகளைப் பொது வீதிகளை உபயோகிக்கும் சகலரும் கடைப்பிடிப்பின் விபத்துக்களைத் தவிர்க்கலாம். வீதிகளை உபயோகிக்கும் பாதசாரிகளுக்கும் இடைஞ்சல்கள் ஏற்படமாட்டா.

வீதிகளில் பயங்கரத்தைத் ஏற்படுத்தும் இன்னொரு வாகனம் ஓட்டோ. இந்த வாகனம் வீதியில் போகும் போது பாம்பு போவது போன்ற பிரமையையும், பயத்தையும் ஏற்படுத்தும். பாம்பைப்போல திடீரென எவ்வித முன்னறிவித்தலும் இன்றித் திரும்பும். வலது பக்கம் திரும்புமா அல்லது இடது பக்கம் திரும்புமா என்பது ஓட்டுநருக்கு மட்டுமே வெளிச்சம். கண்மூடி விழிப்பதற்குள் ஓட்டோ முதல் ஒரு பக்கம் திரும்பும். பிறகு மறுபக்கம் திரும்பும். இந்த ஓட்டோ பல விபத்துக்களுக்குக் காரணமாக இருந்துள்ளது.

ஓட்டோவில் பயணிகள் மட்டும்தான் பிரயாணம் செய்கிறார்கள் என்று நினைத்துவிடக் கூடாது. இதில் துவிச்சக்கர வண்டிகள் எல்லோன்பைப் போன்றவைகளும் ஏற்றப்படுகின்றன. இவற்றினால் மோதுண்டு பலர் காயமுற்றிருக்கின்றனர்.

சமீப காலங்களில் புதுவகையான துவிச்சக்கரவண்டி ஓட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மோட்டார் வாகனங்களைப் பிடித்துக் கொண்டு ஓடுவதுதான் அது. இப்படியான சவாரி அவர்களுக்கு மட்டுமன்றி வீதியை உபயோகிக்கும் மற்றவர்களுக்கும் ஆபத்தை விளைவிப்பதாய் முடியும்.

பொது வீதிகளைப் பாவிக்கும் சகலரும் தமிழீழ காவல்துறையின் போக்குவரத்துப்பிரிவு அறிவித்த விதிமுறைகளைக் கடைப்பிடித்து விபத்துக்களைத் தவிர்க்க முன்வரவேண்டும்.

# இலங்கையிலும் 'எயிட்ஸ்'

## இதுவரை 9 பேர் மரணம்; 14 பேர் மரணத்தறுவாயில்

'எயிட்ஸ்' நோயினால் இலங்கையில் இதுவரை ஒன்பது பேர் மரணமடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இவர்களைத்தவிர மேலும் 14 பேர் இலங்கையில் தற்பொழுது எயிட்ஸ் நோயினால் மரணத்தை எதிர் நோக்கியபடி உள்ளனர்.

அத்துடன் உல்லாசப் பயணிகளாக இலங்கை வந்த வெளி நாட்டவர்களில் ஒன்பது பேர் எயிட்ஸ் நோய் முற்றிய நிலையில் இலங்கையை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இது தவிர சுமார் 600 பேர் தற்பொழுது இலங்கையில் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்படக் கூடிய நிலையில் உள்ளமை கண்டு பிடிக்கப்பட்டு அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றனர். சுகாதார அமைச்சின் புள்ளி விவரமொன்றில் இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

### ஜனசகத் ஆண்டுவிழா

நல்லூர் அரசடி வீதி ஜன சக்தி சனசமூக நிலையத்தின் 43 வது ஆண்டு நிறைவுவிழா இன்றுமுதல் ஏழாம் திகதி வரை மேற்படி நிலைய முன்றலில் இடம் பெறும்

இன்றுகாலை 7.15 மணிக்கு மக்கள் முன்னணி நல்லூர் பிரதேசப் பொறுப்பாளர் ஜெயா நிகழ்ச்சியை ஆரம்பித்து வைப்பார்.

ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெறவுள்ள விழாவில் மக்கள் உறவுக்கொள்கை முன்னெடுப்புப் பிரிவு யாழ் மாவட்டப் பொறுப்பாளர் ஆஞ்சநேயர், இணக்கமன்ற யாழ் மாவட்டப் பொறுப்பாளர் பூங்குன்றல், இணக்கமன்ற வலிகாமப் பிரிவுப் பொறுப்பாளர் க நித்தியராஜ், மகளிர் முன்னணி உறுப்பினர் செல்வி ஆர்த்தி உட்பட பலர் கலந்து கொள்ளுவர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

### இன்று கலைவிழா

யாழ்ப்பாணக் கல்லூரித் தொழில் நுட்ப மாணவர் மன்றத்தின் கலைவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நிறுவன வளாக 'ஏபெல்ஸ்' மண்டபத்தில் இடம்பெறும்.

கலாநிதி சபா. ஜெயராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இவ்விழாவில் கர்நாடக இசைக்கச்சேரி, பரதநாட்டியம், கவிதா நிகழ்வு, பட்டிமன்றம், இசை அரங்கு, நாட்டுக்கூத்து, நாடகங்கள், இசையும் அசைவும் என்பன இடம்பெறும்.

### இறுதிப் போட்டி

இருபாலை உதயதாரகை சனசமூக நிலையம் நடாத்தும் வடமாகாண ரீதியிலான தாச்சிச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் 6ஆம், 7ஆம் 8ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கின்றன.

அமரர் வரதகுலசிங்கம் ஞாபகார்த்தமாக நடைபெறும் இப்போட்டிகளில் சுமார் 75 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன. மூன்று பிரிவுகளாக இச்சுற்றுப் போட்டி நடைபெறவுள்ளது. (16, 47)

### கைநூல் விநியோகம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆரம்ப சுகாதார பராமரிப்புப் பிரிவு ''நீங்கள் அகதியாகி விட்டால் உங்கள் சுகாதாரம்'' என்ற துண்டுப் பிரசுரத்தை அச்சிட்டு இப்பகுதியிலுள்ள இடம் பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் அகதி முகாம்களில் விநியோகித்து வருகின்றது. (13)

### இன்று இசைக் கச்சேரி

யாழ் பல்கலைக் கழக பரமேஸ்வரன் ஆலயத்தின் நிகழ்ச்சித்தொடரில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4. 30 மணிக்கு இசைமணி செல்வி சாரதா சச்சிதானந்தத்தின் இசைக்கச்சேரி நடைபெறும்.

நீராவியடி
வண். வடகிழக்கு சனசமூக நிலைய
நிதி உதவிக்காக

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி
கலை அரங்கில் 14. 07. 91 பி. ப. 3 மணிக்கு

கதகளி பரத கலாமணி இலங்கை வேந்தன்
நடனக் குழுவினரின்

கதகளி பரத நாட்டியம்
(100 வது மேடையாக)

கந்தர்மடம் புலவர் செ. து. தெட்சணா மூர்த்தியின் கதைவசனம் நெறியாக்கத்தில்
உருவாகும்

பண்டார
வன்னியன்
(சரித்திர நாடகம்)



(பண்டார வன்னியனாக இலங்கை வேந்தன்
தோன்றும் காட்சி)

அன்பளிப்பு:-
நியூ சயன்ஸ் அக்கடமி

07025

## 1-ம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி

மலர்வு 18 — 02 — 1953



உதிர்வு 16 — 06 — 1990

திரு. சுப்பிரமணியம் ஆறுமுகம்
திதி. 05. 07. 1991

நாவற்குழியூர் நன்கறிந்த நற்றவமே ஆறுமுகமே
வேண்டுவார் வேண்டுவன உதவுமொரு பொற்பாவாய்
மணநாள் வருமென்றெண்ணி எத்தனை எண்ணங்கள்
நீர் மட்டுமல்ல நாங்களும் கொண்டிருந்தோம்
ஒவ்வொருவர்க்கும் உதவி செய்யும் பண்பில்
யாவருமே மெச்சிநின்ற வேளையில்
காலன் அரக்க உருவில் கவர்ந்தானா
எண்ணத்திற் கெட்டாப் பெருவாழ்வே
அமரத்துவமடைந்த ஆறுமுகமே!

உம்பிரிவால் வாடும்
பெற்றார் சகோதரர்கள்
உறவினர்கள்

04 ஐயனார்கோவிலடி,
நாவற்குழி

07026

## தபால்மா அதிபர் அறிவிப்பு

# இனவிகிதாசார முறையை மீள் பரிசீலிக்க முடியாது

இனவிகிதாசார அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்கப்படுவதை தபால் திணைக்களத்தைப் பொறுத்தமட்டில் மீள் பரிசீலனை செய்ய முடியாதென தபால் மா அதிபர் தொழிற்சங்கத்துக்கு அறிவித்துள்ளார்.

அண்மையில் சுங்கத்திணைக்களத்தைச் சேர்ந்த தமிழ் அதிகாரி ஒருவர் உயர் நீதிமன்றம் இனவிகிதாசார முறையினால் அநீதியான பதவி உயர்வுகள் செய்யப்பட்டுள்ளன என்று தாக்கல் செய்தமனுவை ஏற்று நீதிமன்றம் தீர்ப்பளித்ததை தபால்மா அதிபருக்குச் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

தபால் திணைக்கள தொழிற்சங்க வட்டாரங்கள் தபால் மா அதிபருடன் இதுகுறித்து தொடர்பு கொண்டபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது (33)

## மாநகர வாகனங்கள் சேதமுற்றதால்

# ஆஸ்பத்திரிக் கழிவுகள் ஊழியரால் அகற்றப்பட்டன

யாழ் போதனா வைத்திய சாலைக் கழிவுகளை அங்கு கடமையாற்றும் சுகாதாரத் தொழிலாளர்களே அகற்றி வருகின்றனர்.

ஒப்பந்த அடிப்படையில் வைத்தியசாலை நிர்வாகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ட்ராக்டரிலேயே இக் கழிவுகள் மூன்று நாள்களுக்கு ஒருமுறை அகற்றப்படுகிறது.

முன்னர் இக்கழிவுகள் யாழ் மாநகரப்பகுதியினரால் அவர்களது வாகனத்திலேயே அகற்றப்பட்டு வந்தது. விமானத் தாக்குதலினால் மாநகரசபை வாகனங்கள் சேதமடைந்துவிட்டமையினால் ஆஸ்பத்திரி நிர்வாகமே தற்போது இப்பணியை மேற்கொண்டு வருகிறது. (79)

# அகதிகளுக்கான குடிசைகள் கடும் காற்றினால் பாதிப்பு

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியில் அகதிகளுக்குத்தொண்டர் நிறுவனங்களால் அமைக்கப்பட்ட குடிசைகள் தற்போது வீசும் காற்றினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் இக்குடிசைகளில் இடம் பெயர்ந்தவர்கள் வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இக்குடிசைகளைத் திருத்தியமைக்க தொண்டர் நிறுவனங்கள் எதுவும் முன்வரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இந்த அகதிகள் வறிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும், இதற்கு உலக தொண்டர் நிறுவனம் ஒன்று உதவிபுரிவதாகக்கூறியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் இந்த அகதிகள் தெரிவிக்கின்றனர். 74

# வீரமரணம்

ஆனையிறவு இராணுவத்தினருடனான மோதலில் காயமடைந்த பிரசாத் (பா. மகேந்திரன் மட்டக்களப்பு) நேற்று வீரமரணமடைந்தார்.

### வலிகாமம்...

ஆ. சிதம்பரம் (80 வயது) தையிட்டி, க. தங்கப்பிள்ளை (54 வயது), த. அன்னமுத்து (54 வயது) செ. தம்பிராஜா (58 வயது), தி. இரத்தினம் (75 வயது), மு. வள்ளிப்பிள்ளை,(60வயது)மயிலிட்டி, எஸ்.லோகேஸ்வரன் (21வயது கே. கே. எஸ், க. நடராஜா (70 வயது), க. பரமேஸ்வரி (55 வயது) சி. இராசலிங்கம் (60 வயது) தையிட்டி, சி. சுந்தரி (40 வயது), க. பாக்கியம் (53 வயது), கே. அருளம்பலம் (70 வயது) சின்னையா சாந்தலட்சுமி (31 வயது), அ. நாகம்மா (56 வயது), க. பரமேஸ்வரி (70 வயது) இவர்கள் அனைவரும் இன்று காங்கேசன்துறை முகாமில் இருந்து சர்வதேச செஞ்சிலுவையினால் பருத்தித்துறையில் உள்ள 'குமண' கப்பல் மூலம் கொண்டு வரப்பட்டனர்.

இவர்கள் மாலை 5.30மணியளவில் யாழ் செஞ்சிலுவைச் சங்கத்தில் வைத்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களை கண்ட உறவினர்கள் அவர்களை கட்டித் தழுவி அழுதகாட்சி அங்கு நின்ற அதிகாரிகளின் கண்களையேகலங்க வைத்தது. வயோதிபர்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் தாம் இதுவரை அனுபவித்தவற்றை கூறிக்கொண்டு நின்றனர். 74

### 3 உயர்தர...

கைதானவர்களில் 5 இளைஞர்களை முகாம் கொண்டு சென்றனர். இவர்களில் மூவரைச் சித்திரவதை செய்த பின் கொலை செய்தனர்.

கொல்லப்பட்ட மூவரும் உயர்தர மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது

### தாக்குதலுக்கு...

யில் தெரிவித்தார்.

இத்தாகுதலுக்கு முதலமைச்சர் ஜெயலலிதாவே பொறுப்பேற்க வேண்டும் என அவர் தெரிவித்தார். இதே வேளை பண்ருட்டி ராமச்சந்திரன் சட்டசபையில் வைத்துத் தாக்கப்பட்டது குறித்து கருணாநிதி கண்டனம் தெரிவித்துள்ளார். இது ஜனநாயக விரோதச் செயல் என அவர் குறிப்பிட்டார். (முன்வந்த செய்தி உள்ளே)

### பேராசிரியர்...

குவார் எனத்தெரிவிக்கப்படுகிறது.

பேராசிரியர் பீற்றர் சோல்க் தமிழர் போராட்டங்கள் குறித்து சர்வதேச ரீதியில் பல ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டவர் என்பது தெரிந்ததே கடந்தவருட இறுதியிலும் இவர் யாழ் வந்து திரும்பியிருந்தார் (ப-11)

### ஜெயலலிதா...

இராமச்சந்திரன் வாழ்த்து தெரிவித்துள்ளாராம்.

எம். ஜி.ஆர் ஆட்சியே மீண்டும் தமிழகத்தில் ஏற்பட்டுள்ளதாக உணர்கிறேன் என ஜானகிஇராமச்சந்திரன்தனது வாழ்த்தில் குறிப்பிட்டுள்ளார்.

★ 664 மாணவர் பட்டம் பெறுகின்றனர்; இருவருக்கு கலாநிதிப்பட்டம்

# யாழ் பல்கலைக்கழகத்தில் நாளை 11ஆம் பட்டமளிப்பு விழா

யாழ் பல்கலைக்கழகத்தின் 11 ஆவது பட்டமளிப்பு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் முதல் நண்பகல் வரை இரு அமர்வுகளாக நடைபெறவுள்ள இவ்விழாவிற்கு யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா அவர்கள் தலைமை தாங்கிப் பட்டங்களை வழங்குவார்.

இவ்வாண்டு மொத்தம் 664 பல்கலைக்கழக மாணவர்கள் பட்டம் பெறுகின்றார்கள். கலாநிதிப் பட்டம் 2 பேருக்கும், முதுமெய்யியல்மாணி ஒருவருக்கும், முதுகலைமாணி 17 பேருக்கும், முதுவிஞ்ஞானமாணி 4 பேருக்கும், பட்டப்பின்கல்வி டிப்புளோமா 66 பேருக்கும், கலைமாணி 179 பேருக்கும், நிர்வாகமாணி 51 பேருக்கும், வர்த்தகமாணி 75 பேருக்கும், மருத்துவமாணி சத்திர சிகிச்சைமாணி 66 பேருக்கும், விஞ்ஞானமாணி 146 பேருக்கும், இசைக்கலைமாணி 24 பேருக்கும், நாட்டியக்கலைமாணி 8 பேருக்கும், மிருதங்கஇசைக்கலைமாணி 126 பேருக்கும், சித்தமருத்துவமாணி 4 பேருக்கும் பட்டங்களும், விருதுகளும் இப்பட்டமளிப்பு விழாவில் வழங்கப்படும்.

நாளை நடைபெறவுள்ள பட்டமளிப்பு விழாவில் இருவர் கலாநிதிப் பட்டத்தினைப் (Ph. D) பெறுகின்றனர்

தமிழ்த்துறையில் கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளையும், மருத்துவத்துறையில் செல்வி வசந்தி அரசரத்தினமும் கலாநிதிப் பட்டத்தினைப் பெறுகின்றனர்.

முதுமெய்யியல்மாணிப் பட்டம் ஒருவர் பெறுகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவினையொட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கைலாசபதி அரங்கில் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழகம் சிறப்புக் கலை நிகழ்ச்சி ஒன்றினை வழங்கவுள்ளது.

இக்கலை நிகழ்ச்சியில் கூட்டுப்பாடல், பல்லிய இசை, அரங்கிசை, தாளத்திய இசை, பண்ணிற் பரதம், பண்ணிசை என்பன இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து 8 ஆம், 9 ஆம் திகதிகளில் திருமதி லீலாவதி இராமநாதன், சேர் பொன்னம்பலம் இராமநாதன் ஆகியோரது நினைவுப் பேருரைகளும் இடம்பெறும். (ப-11)

# பொலிஸார் அச்சம்

மரணத்துக்கு அஞ்சாத கரும்புலிகள் படையினர் இன்னமும் கொழும்பு நகரில் தங்கியுள்ளனர் என பொலிஸார் அஞ்சுவதாக பி. பி.ஸி நேற்றிரவு தெரிவித்தது.

### தமிழக

தினர்.

பேச்சுவார்த்தையின் முடிவில் தமிழக கடற்பகுதியில் பாதுகாப்பை உடனடியாக அதிகரிப்பது என முடிவாகியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### 14 நாள்களுக்குள்...

வைத்துள்ள வேறு பகுதிகளைச்சேர்ந்தவர்கள் குறித்து பொலிஸில் பதிவு செய்தல் அவசியம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

14 நாள்களினுள் பதிவு செய்யாதவர்கள் மீது அவசரகாலச் சட்டவிதிக்கமையவே நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு எச்சரித்துள்ளது.

### ஈழத்தமிழர்...

டனர்.

தம்மைத்தாமே எதிரிகளிடம் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் அளவுக்கு ஈழத்தமிழர் வளர்ச்சியடைந்துள்ளதாகக் குறிப்பிட்ட அருச்சுனா சிற்றம்பலம், இதற்காக அவர்கள் வெளியார் எவரினதும் பாதுகாப்பு உதவியைக் கோரும் நிலையில் இப்போது இல்லை என்றார்.

இந்தியா ஈழத்தமிழருக்கு ராஜீவ் காந்தியின் சோக அலை தீர்ந்த பின்னர் இந்திய ஈழத்தமிழர் பிரச்சினையில் கவனம் செலுத்தலாம்.

ஆனால் இது அவசியம் என்றோ தவிர்க்க முடியாதது என்றோ எதிர்பார்க்கும் அளவுக்கு இன்று ஈழத்தமிழர் இல்லை என அவர் அம்மாநாட்டில் சுட்டிக்காட்டினார்.

# சைக்கிளில் சென்ற மாணவிகள் கார் மோதிக் காயம்

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இரு மாணவிகள் மீது பின்னால் வந்த கார் ஒன்று மோதி இருவரும் காயப்பட்ட நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் சண்டிலிப்பாய்ச் சந்தியில் இடம்பெற்றது. செல்வி சுதா ஜெகநாதன் (15வயது) சண்டிலிப்பாய், செல்வி யசோதினி நவரட்ணம் (16 வயது) மானிப்பாய் ஆகிய இருவரும் மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளாவர். (79)

### வீடுகளை...

வெளியே எட்டிப்பார்த்த போது கதிரமலை என்பவர் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்

## 15 வயோதிபர்கள் மரணம்

அப்பகுதியில் 15க்கு மேற்பட்ட வயோதிபர்கள் நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவ வசதியின்றி மரணம் அடைந்தனராம். மேலும் அங்கு வசிப்பவர்கள் எல்லாரிடமும் தங்க நகைகளை இராணுவம் பறித்து எடுத்தனர் என பெண்மணி ஒருவர் குறிப்பிட்டார்.

அப்பகுதியில் படையினரிடம் இன்றும் 50க்கு மேற்பட்டோர் உள்ளனர் எனவும் அவர்களை படையினர் விடுவிக்க இல்லை எனவும் கூறினார்.

## வீடுகள் தரைமட்டம்

இராணுவம் நிலைகொண்டுள்ள பகுதியில் இருந்து தமிழர்களின் பெறுமதிமிக்க பொருள்களை திருடி செல்வதுடன் வீடுகள் அனைத்தும் புல்டோசர் மூலம் இடித்து தரைமட்டம் ஆக்கியுள்ளனராம், அத்துடன் சில குடிசை வீடுகள் கொழுத்தப்பட்டுள்ளதாம்.

இவர்களை நேற்றுக் காலை 8-30 மணிக்கு இராணுவ வாகனம் மூலம் படையினர் ஏற்றி காங்கேசன்துறை துறைமுகத்திற்கு கொண்டு வந்தனர். பின்னர் குமண கபபல் மூலம் பருத்தித்துறை துறைமுகத்திற்கு 4.00 மணியளவில் கொண்டுவரப் பட்டனர், அதுவரை தங்களுக்கு உணவு ஏதும் தரவில்லை எனவும் அவர்கள் கூறினார், 74

## கலந்துரையாடல்

விடுதலைப்புலிகள் மாணவர் இயக்க வலிகாமப்பிரிவு தொடர்பாளர்கள் கிராமியத் தொடர்பாளர்கள், உறுப்பினர்கள் அனைவருக்குமான கலந்துரையாடல் இன்று மானிப்பாய் மெமோரியல் பாடசாலையில் மாலை 4-30 மணிக்கு நடைபெறும்.

# கடிதங்களை சேர்க்கவும்

எதிர்வரும் திங்கட்கிழமை பருத்தித்துறையில் இருந்து கொழும்பு செல்லும் கப்பலில் குடா நாட்டுத் தபால் பொதிகளும் அனுப்பிவைக்கப் படவுள்ளதாகத் தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ் பிரதம தபாலக தபால் சேகரிக்கும் பெட்டியில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு முன்னதாக சேர்க்கும் கடிதங்களும் கப்பலில் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.33

### கேரள...

என்றது அந்தக்குரல்.

ராஜீவ் கொலையால் பீதியடைந்திருந்த அப்பகுதி மக்கள் பதறியடித்து இது குறித்துப் பொலிஸாரிடம் தொடர்பு கொண்டனர்

இது வெறும் புரளி எனப் பின்னர் தெரியவந்தது. வானொலி ஒலிபரப்புப்பற்றி தெரிந்த யாரோ ஓர் விஷமி இந்த மிரட்டல் வேலையைச் செய்திருக்கலாம் என கேரளப் பொலிஸார் தெரிவித்தனர்.


## கலந்துரையாடல்

**தமிழீழ விடுதலைப்புலிகளின் துணைப்படைப் பயிற்சி பெற்ற அனைவருக்குமான கலந்துரையாடல்**

இடம்; யா / இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபம்
காலம்: 05. 07. 1991 வெள்ளிக்கிழமை
நேரம்; மாலை 4. 00 மணி

**துணைப்படைப் பயிற்சி பெற்ற அனைவரும் தவறாது இந் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.**

''புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்''

தமிழீழ விடுதலைப் புலிகள்.


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் [பிறைவேற்] லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்'இல் உள்ள அச்சகத்தில் 05.07.91 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.